# 15 படைப்பின் இரகசியம்

கழனியூரான் எழுதிய மண்பாசத்திலிருந்து எடுக்கப்பட்டது. பூசணிக் கொடியில் காய்த்த பூசணிக் காய்க்கும் ஆலமரத்தில் காய்த்திருக்கும் ஆலங் காய்க்கும் இடையிலே காணப்படும் வித்தியாசம் விளக்கப்படுகின்றது. இதன்மூலம் படைப்பின் இரகசியம் உணர்த்தப்படுகின்றது. ஒருவர் தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தினை வழிப்போக்கரிடம் கேட்டபோது வழிப்போக்கர் அதற்கு நடைமுறை ரீதியாக விளக்கம்கொடுக்கின்றார்.

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் சிகாமணி என்று ஒருவன் இருந்தான். அவனுக்கு எப்போதும், எது பற்றியும் சந்தேகம் தோன்றிக்கொண்டே இருக்கும். எதற்கெடுத்தாலும் 'அது ஏன் அப்படி?' என்று கேட்டுக் கொண்டே இருப்பான். எதையும் ஆராய்வது நல்லதுதான். ஆனால் நம்ம சிகாமணி தேவையற்ற விசயத்தில் மூக்கை நுழைத்து விட்டுப் பின்னர் வசமாக வாங்கிக் கட்டிக்கொள்வான்.



ஒருநாள் சிகாமணி வெளியூருக்குப் போய்க் கொண்டிருந்தான். போகிற வழியில் ஒரு வயலில் பூசணிக்கொடி ஒன்று படர்ந்திருப்பதையும் அதில் ஒரு பெரிய பூசணிக்காய் காய்த்திருப்பதையும் பார்த்தான். அதைப் பார்த்ததும் நமது சிகாமணிக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. 'எவ்வளவு மெல்லிய கொடியில் எத்தனை பெரிய பூசணிக்காய் காய்த்திருக்கிறது' என்று நினைத்தான்.

இன்னும் சற்று தூரம் சென்றதும் ஒரு பெரிய ஆலமரத்தைப் பார்த்தான். அதில் மிகச்சிறிய பழம் பழுத்திருந்தது. இது என்ன ஆச்சரியம் 'இவ்வளவு பெரிய மரத்தின் பழம் மிகச் சிறியதாக இருக்கிறது!' என்று நினைத்தான். இயற்கையின் இந்தப் படைப்பு இரகசியம் நமது சிகாமணியை ரொம்பவும் சிந்திக்க வைத்தது.

மெல்லிய பூசணிக்கொடி பெரிய காய் காய்ப்பதற்கும், மிகப்பெரிய ஆல மரம் மிகச்சிறிய காய் காய்ப்பதற்கும் காரணம் என்ன என்று யாரிடமாவது கேட்க வேண்டும் என்று நினைத்தான். அப்போது எதிர்த்திசையிலிருந்து ஒரு பெரியவர் வந்தார். அவரும் வழிப்போக்கர்தான். அந்தப் பெரியவரிடம் நம்ம சிகாமணி, தனது சந்தேகத்தைக் கேட்டான். பெரியவர் சிரித்துக்கொண்டே, 'அப்பா, இயற்கையின் படைப்பு இரகசியம் ஒவ்வொன்றிற்கும் ஒரு காரணகாரியம் இருக்கிறது. உன் கேள்விக்கான விடையைப் பிறகு சொல்கிறேன். நேரம் உச்சிப் பொழுது ஆகிவிட்டது. நான் வெகுதூரத்தில் இருந்து நடந்து வருகிறேன். இங்கே பக்கத்தில் தெளிந்த நீரோடை உள்ளது. அதில் சுத்தமான தண்ணிர் உள்ளது. இந்த ஆலமரத்தின் நிழலில் உட்கார்ந்து முதலில் நாம் இருவரும் சாப்பிடலாம். நான் கட்டுச்சோறு கொண்டு வந்திருக்கிறேன். உன்னிடம் சாப்பிட ஏதாவது இருக்கிறதா? இருந்தால் நாம் இருவரும் சேர்ந்து சாப்பிடலாம். இல்லை என்றால், என்னிடம் உள்ள கட்டுச்சோற்றை நாம் இருவரும் பகிர்ந்து சாப்பிடலாம் என்றார்.

'ஐயா நானும் கட்டுச்சோறு கொண்டு வந்திருக்கிறேன். நானும் வெகு தூரத்திலிருந்துதான் வருகிறேன். எனக்கும் பசிக்கிறது. உங்களோடு பேசிக்கொண்டே சாப்பிட விரும்புகிறேன்' என்று சொல்லி, சிகாமணி தான் கையோடு கொண்டு வந்திருந்த கட்டுச்சோற்றை வெளியே எடுத்தான்.

பெரியவர் தன்னிடம் உள்ள ஒரு சுரக்குடுக்கையை சிகாமணியிடம் கொடுத்து, 'ஓடையில் இறங்கி, சுரக்குடுக்கை நிறைய தண்ணீர் முகர்ந்து வா!, என்றார். சிகாமணியும் சுரக்குடுக்கையை எடுத்துக்கொண்டு சென்று தண்ணீர் முகர்ந்து வந்தான். அதன் பிறகு இருவரும் கொண்டு வந்திருந்த கட்டுச்சோற்றைப் பகிர்ந்து உண்டார்கள்.

'உண்ட மயக்கம் தொண்டர்க்கும் உண்டு அல்லவா?' எனவே,

பெரியவர், 'தம்பி, வெயில் மிகக் கடுமையாக அடிக்கிறது. நடந்துவந்த களைப்பு வேறு; உண்ட மயக்கம் வேறு. எனவே இந்த ஆலமரத்தடியில் சிறிது நேரம் படுத்திருந்துவிட்டு வெயிலின் கடுமை தணிந்த பிறகு இருவரும் அவரவர் பாதையைப் பார்த்து நடப்போமா?' என்றார்.

நமது சிகாமணிக்குப் பெரியவர் சொன்ன யோசனை 'சரி' என்றே பட்டது. எனவே 'சரி ஐயா, நாம் இருவரும் இந்த மரத்தின் நிழலில் படுத்துச் சற்று நேரம் இளைப்பாறுவோம்!' என்றான். ஆலமரத்தின் நிழலில், மணல் வெளியில், இருவரும் கட்டையைச் சாத்தினார்கள் (படுத்தார்கள்). பக்கத்தில் உள்ள நீரோடையில் இருந்து குளிர்ந்த காற்று வீசியதால், இருவரும் சற்று நேரத்தில் தூங்கி விட்டார்கள். நமது சிகாமணி மெல்லிய குறட்டை வேறு விட ஆரம்பித்து விட்டான். சுமார் ஒரு நாழியை நேரம் கழித்து சிகாமணி, 'ஐயா.... அம்மா' என்று அலறிக்கொண்டே கண் விழித்தான். சிகாமணி போட்ட சத்தத்தில் பக்கத்தில் படுத்துக் கிடந்த பெரியவரும் தூக்கம் கலைந்து கண் விழித்துப் பதறியடித்து எழுந்தார்.

சிகாமணி தன் மூக்கைச் சொறிந்துகொண்டு சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். பெரியவர் அவனிடம் 'என்ன நடந்தது? ஏன் இப்படி அலறி அடித்துக்கொண்டு எழுந்தாய்?' என்று கேட்டார்.

சிகாமணி, 'ஐயா, நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது சரியாக என் மூக்காந்தண்டில் (மூக்கின் நடுப்பகுதி) பார்த்து ஒரு ஆலம்பழம் விழுந்து விட்டது. அதனால்தான் அலறி அடித்துக்கொண்டு எழுந்தேன்' என்றான்.

பெரியவர் ஒரு புன்சிரிப்பை உதிர்த்து விட்டு, நமது சிகாமணியைப் பார்த்து,' இத்தனை பெரிய ஆலமரத்தில் ஏன் இத்தனை சிறிய காய் காய்க்கிறது? என்று கேட்டாயே இப்போது நீயே சற்று யோசித்துப் பார். இந்த ஆலமரத்தில் பூசணிக்காய் அளவுள்ள பழம் பழுத்திருந்து, இப்போது உன் முகத்தில் விழுந்திருந்தால் உன் கதி என்னவாயிருக்கும்?' என்று கேட்டார்.

நம்ம சிகாமணிக்கு இப்போது இயற்கையின் படைப்பு இரகசியம் மெல்லப் புரிய ஆரம்பித்தது. பெரியவர் சிகாமணியைப் பார்த்து, 'எத்தனை சிறிய ஆலவிதையில் இருந்து இத்தனைப் பெரிய ஆலமரம் உருவாகி

இருக்கிறது. இத்தனை பெரிய ஆலமரம் மிகச்சிறிய ஆலவிதைக்குள்தான் கருக்கொண்டிருக்கிறது. தென்னை மரத்தின் விதை மிகப்பெரியதாக இருக்கிறது. ஆனால் தென்னை மரம் ஒரே போக்காக, கொப்புகள் இன்றி, கிளைகள் இன்றி, ஓரிப்பாக (நீள வசத்தில்) மேல்நோக்கி வளர்கின்றது. இதுபோல கோடிக்கணக்கான படைப்பின் இரகசியங்கள் இயற்கையில் உள்ளது. அவை பற்றி வீணாக நீ சந்தேகம் கொள்ளவேண்டாம். இயற் கையைக் கூர்ந்து கவனிப்பதில் தப்பில்லை. 'ஏன்? எதற்கு? என்று கேள்விகள் எழுப்பி அதற்கான விடைகளைத் தேடுவதிலும் தப்பில்லை. ஆனால், இயற்கையின் படைப்பு ரகசியத்தைப் பற்றி நீ ஐயம் கொள்ள வேண்டாம்' என்றார். நமது சிகாமணிக்கு வந்த சந்தேகம் தீர்ந்தது. எனவே, பெரியவரைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு, தன் உடைமை களை எடுத்துக்கொண்டு, தன் வழியைப் பார்த்து நடக்கலானான்.

**கழனியூரான்.**

**அரும்பதங்கள்**

மூக்கை நுழைத்தல் - பிறருடைய விஷயத்தில் தலையிடுதல்

கட்டுச் சோறு - வழிப் பயணத்துக்குக் கொண்டு செல்லும் சோறு

நாழிகை - காலஅளவு, அறுபது வினாடி கொண்ட கால அளவு

பதறியடித்தல் - முன்பின் ஆராயாமல் கலக்கத்துடன் அவசரமாகச் செயற்படுதல்

**கிரகித்தல் பயிற்சி**

1. சிகாமணிக்கு ஏற்பட்ட சந்தேகம் என்ன?
2. தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தினை யாரிடம் கேட்டான்?
3. சிகாமணியும் பெரியவரும் உண்பதற்கு அமர்ந்த இடம் எப்படிப்பட்டது?
4. கட்டையைச் சாத்தினார்கள் என்பதன் பொருள் என்ன?
5. படைப்பின் ரகசியத்தினைப் பெரியவர் எவ்வாறு விளக்கினார்?
6. ''நானும் கட்டுச்சோறு கொண்டு வந்திருக்கிறேன், நானும் வெகு தூரத்திலிருந்துதான் வருகின்றேன்'' சந்தர்ப்பம் எழுதுக.

7. ''சிகாமணி சற்றுத் தூரம் சென்றதும் ஒரு பெரிய ஆலமரத்தைப் பார்த்தான்'' இத் தொடரின் எழுவாய், பயனிலை,செயற்படு பொருள் என்பனவற்றை எழுதுக.

8. வாக்கியம் எழுதுக:

அ. காரண காரியம் ஆ. நீரோடை இ. கண்விழித்தல்
ஈ. ஆச்சரியம் உ. கட்டுச்சோறு

**மொழித்திறன் விருத்திச் செயற்பாடு**

இது போன்ற கதைகளை வாசித்து தெளிவினைப் பெறுவதோடு, கதைகளையும் கட்டுரை வடிவில் எழுதுக.

## பெயர்ச் சொற்கள்

மனிதன், மரம், புத்தகம், நாய், தெய்வம், அன்பு, தண்ணீர் போன்ற சொற்கள் பெயர்ச் சொற்களாகும். அவை,

- ★ மூவிடப் பெயர் - தன்மை, முன்னிலை, படர்க்கை
- ★ மாற்றுப் பெயர் - நான், நீ, அவன், யார்
- ★ கூட்டுப்பெயர் - வானொலி, நீர்வீழ்ச்சி
- ★ தொழிற்பெயர் - கடித்தல், ஓடுதல், ஆடுதல்
- ★ வினையாலணையும் பெயர் - வந்தவன், வந்தவர், வந்தது, வந்தவை
- ★ ஆக்கப்பெயர் - முதலாளி, படிப்பு, கடன்காரன், படிப்பான்

**பயிற்சி**

1. பெயர்ச் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் மேலும் இவ்விரண்டு உதாரணம் தருக.
2. தன்மை, முன்னிலை, படர்க்கை பெயர்களுக்கு உதாரணம் தருக.